முருகப்பெருமான் துணை

**மகான் சத்யானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.11.2022**, புதன்கிழமை

1. ஞான சக்திமிக்க நல்லுலகை
ஞானிகளை கொண்டு படைக்க
ஞானபூசை நடத்தும் அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது துலை திங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 23 ம் நாள் 09.11.2022, புதன்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு சத்யானந்தர் யானும்
3. யானுரைக்க சன்மார்க்கம் எனும்
உயிர்கொலை நீக்கி வாழும்
ஞானவழிகளை மக்கள் ஏற்று
நம்பிக்கை வைத்து வருதலுற
4. வருகவே தன்னம்பிக்கை பெருகி
வளர்ச்சிக்கான வழிவகைகள்
முருகப்பெருமான் அருளால் கிட்டும்
முழுமையான மனிதன் ஆகும்
5. ஆகும் உயர் சிந்தைகளும்
அறிவுத் தெளிவு திடமென
வாகுடனே அனைத்தும் கூடியே
வல்லமையான நிலை அடைவர்
6. அடைவர் வாழும் காலமே
அடைவதில் மற்றவர்க்கும் தந்து
தடையற தருமம் காக்கும்
தனித்துவம் பெருகி இனிதே
7. இனிதே அரங்கன் தொடர்பில்
இணைந்து தொடர்ந்து வர
கனிவேலன் ஆசிபட உலகோர்
கலியிலும் ஞானவான்களாக
8. ஆகவே தேர்ச்சி காண்பர்
அரங்க மகான் தருகின்றநல்
மகாமந்திர தீட்சை பலத்தால்
மரணம் வெல்லும் பலம் கூடி
9. கூடியே உலகினில் ஞானிகளாக
குருவருள் நிரம்பிய வண்ணம்
தேடியே உலகமெல்லாம் சேவை
தேசிகன் பேரிலே செய்து

10. செய்து உலகையே மாற்றும்
சித்தர்களாக ஞானத்தலைமை
அய்யமின்றி படைத்துக் காத்து
அகிலத்துக்கு ஞான ஆட்சித் தருவர்

11. தருகவே தரும பலத்தினாலும்
தவராஜன் தவத்தாலும் இனிதே
ஆறுமுகனார் தலைமை உருவாகும்
அருளிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–